©
தமிழ்நாடு அரசு
2016

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 30] சென்னை, புதன்கிழமை, ஜூலை 27, 2016
ஆடி 12, துன்முகி, திருவள்ளுவர் ஆண்டு–2047

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 144, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M2)த் துறை, 30 ஜூன் 2016.]*

1948ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 6 மற்றும் 112ஆம் பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக்கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1950 ஆம் ஆண்டு தொழிற்சாலை விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் வரைவுத் திருத்தங்கள், மேற்சொன்ன சட்டத்தின் 115ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவுத் திருத்தங்கள் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து நாற்பத்தைந்து நாட்களுக்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் ஏதேனுமிருப்பின், அவற்றை இரு படிகளில் எண் 35, திரு.வி.க. நெடுஞ்சாலை, சென்னை–600 014 இல் உள்ள தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்கள் மூலம் அரசு செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவுத் திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,—

(1) 3ஆம் விதியைச் சேர்ந்த (3) துணைவிதியில் "விண்ணப்பித்துள்ளவற்றுக்காக அனுமதி அளிக்கலாம்" என்ற தொடருக்குப் பதிலாக, "அத்தகைய விண்ணப்பம் வரப்பெற்ற நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் விண்ணப்பித்துள்ளவற்றுக்காக அனுமதி அளிக்கப்படும்" என்ற தொடர் அமைத்துக்கொள்ளப்படும்;

(2) 4ஆம் விதியைச் சேர்ந்த (6) துணை விதியில் "படிவம் எண் 4:" என்னும் தொடருக்குப் பின்னர், "(2) துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் வரப்பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள்" என்ற தொடர் சேர்க்கப்படும்;

(3) 7ஆம் விதியைச் சேர்ந்த (5) துணை விதியில் "தொழிற்சாலைகள் துணை தலைமை ஆய்வாளர் உரிமத்தைப் புதுப்பிக்கலாம்" என்ற தொடருக்குப் பதிலாக, "(2) துணை விதியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பம் வரப்பெற்ற நாளிலிருந்து 30 நாட்களுக்குள் புதுப்பிப்பார்" என்ற தொடர் அமைத்துக்கொள்ளப்படும்.

**பெ. அமுதா,**
*அரசு செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்**,
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.